[24th March 1961

கைதிகள் செக்கிழுக்கின்றார்கள் என்று தவறாக யாராவது நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது செக்கை மாடுகள்தான் இழுக்கின்றன.

SRI A. VEDARATHNAM : சிறைகளில் இப்போது உபயோகிக்கப் படுகிற செக்குகள் வார்தா முறை செக்குகளா? இல்லையென்றால் அவைகளை உபயோகிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Political prisoners (release)

* 1060 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to release all political prisoners; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : In the case of Kasi Rajan and Rajagopalan, the Government have released them even before the expiry of the sentence. So, will the Government show mercy to other political prisoners also and release them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have considered this particular question and they have decided not to do anything just now.

SRI K. VINAYAKAM : Will the Government desist from releasing such of those prisoners who have committed loot, murder and arson in the name of politics?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But I cannot give an assurance to the hon. Member. Prisoners will be released when their term expires (Laughter).

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வெள்ளையன் காலத்தில் ஜனம் விநாயகம் அவர்கள் சொன்னார்களே, அதைவிடவும் மோசமான சார்ஜ்களையெல்லாம் போட்டு பலர் தண்டிக்கப்பட்டார்கள். அந்தக் காரணத்தின்பேரிலேயே காசிராஜன், ராஜகோபாலன் போன்றவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தார்கள், அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கிளர்ச்சி செய்தோம். ஆகவே இன்றையதினம் சிறைகளில் இருக்கின்ற வர்கள் எந்த முறையில் தவறுகள் செய்தார்கள் என்பது வேறு பிரச்னை. அவர்கள் வேறு எந்தவிதத்திலோ தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசியல் கைதிகளாக 10 ஆண்டுகள் சிறையில் இருக்கிறார்கள். ஆகவே வருகின்ற தேர்தலை முன்னிட்டாவது உடனடியாக அவர்களை விடுதலை செய்வதற்கு அமைச்சர்கள் குழுவில் முடிவு செய்ய எற்பாடு செய்யப்படுமா ?

24th March 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்பதைப்பற்றி இப்போது பேச வேண்டிய அவசியமில்லை. தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இவர்கள் எல்லாம் கோர்ட்டில் தண்டனை பெற்றவர்கள். அதை நம்முடைய இஷ்டத்திற்குத் தக்கவாறு மாற்ற முடியாது. மாற்றவேண்டும் என்று சர்க்கார் ஏதாவது சந்தர்ப்பங்களில் நினைத்தால் அவ்விதம் முடிவு செய்யும். இப்போது தண்டனை பெற்றிருப்பவர்களை எல்லாம் அரசியல் கைதிகள் என்று சொல்லிவிட முடியாது. அதை சர்க்காரும் ஏப்புக்கொள்ள முடியாது. ஆகவே இவர்களை விட்டுவிட வேண்டும் என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தப் போக்கையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாது.

SRI N. K. PALANISAMI: May I know whether the Government are aware of the volume of public support for the release of these political prisoners and the Communist Party of India has already planned to place the public views on release of political prisoners before Government? If so, why should not Government comply with those views?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Communist Party of India wants the release of their men who have been convicted for certain grave offences. But I cannot accept that the views of the Communist Party of India reflect the views of the public.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ: கனம் அங்கத்தினர் சொன்னார் வெள்ளையர் காலத்தில்கூட கனம் விநாயகம் போன்றவர்கள் இருக்கிற கட்சியில் செய்தார்கள் என்று. கடந்த காலத்தில் வெள்ளையர்கள் இருந்தபோது அங்கு இருந்த அதிகாரிகளை எதிர்த்துப் போராடியிருக்கலாம். ஆனால் சகோதரத் தோழர்களையே வெட்டிக் கொலை செய்த சம்பவங்களைக் காட்ட முடியுமா? இவர்களுக்கு ஆதரவு காட்டும் முறையில் விடுதலை செய்யத் தயாராக இருக்கிறதா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பழைய சரித்திரத்திற்கு இந்த கேள்வி நேரத்தில் போக வேண்டிய அவசியமில்லை.

Sri N. K. Palanisami rose.

DEPUTY SPEAKER: This matter was discussed already when the Jail Demand was discussed in this House. The Hon. Minister has replied suitably. There is, therefore, no need to put any more questions.

Sales-tax on paddy (removal)

* 1061 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நெல் மண்டி கமிஷன் வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் நெல்லுக்கு விற்பனை வரியை எடுத்துவிடும்படி கோரி 22—12—1960 தேதியிட்ட விண்ணப்பம் சர்க்காருக்கு வந்ததா?

(இ) அதன்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination by the Government.